# பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

## பத்தாம் வகுப்பு / இயல் - 2

**நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,**
**பாடுஇமிழ் பனிக்கடல் பருகி,வலன் ஏர்பு,**
**கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி**
**பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,**
**அருங்கடி மூதூர் மருங்கில் போகி,**
**யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லோடு,**
**நாழி கொண்ட,நறுவீ முல்லை**
**அரும்பு அவிழ் அலரிதூஉய்,கைதொழுது,**
**பெருமுது பெண்டிர்,விரிச்சி நிற்ப**

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சச்சிதானந்தன் ஆ) பெருஞ்சித்திரனார் இ) தமிழழகனார் ஈ) நப்பூதனார்

2. இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ) முல்லைப்பாட்டு ஆ) இரட்டுற மொழிதல் இ) கனிச்சாறு ஈ) காசிக்காண்டம்

3. நறுவீ - என்பது____________

அ) நன்று ஆ) நல்ல மலர் இ) நறுமணமிக்க மலர் ஈ) வாசனை

4. உறுதுயர் - இலக்கணக் குறிப்புத் தருக:-

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வேற்றுமைத் தொகை

ஈ) உரிச்சொல் தொடர்

5. மூதூர் - என்பதன் இலக்கணக் குறிப்புத் தருக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வேற்றுமைத் தொகை

ஈ) உரிச்சொல் தொடர்

6. சுவல் - என்பது ?

அ) சங்கு ஆ) நற்சொல் இ) தோள் ஈ) அறிவு

7. தடக்கை என்பதன் இலக்கணக் குறிப்புத் தருக ------------

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வேற்றுமைத் தொகை

ஈ) உரிச்சொல் தொடர்

8. நேமி - என்பது ?

அ) வலம்புரிச்சங்கு ஆ) நற்சொல் இ) தூவி ஈ) மலை

9. கொடுஞ்செலவு - என்பது ?

அ) அகன்ற உலகம் ஆ) விரைவாகச் செல்லுதல் இ) தோள் ஈ) நற்சொல்

10. பொறித்த - பகுபத உறுப்பிலக்கணம் விடுபட்டதை நிரப்புக;-

பொறி - பகுதி

த் - சந்தி

த் - _______

அ - பெயரெச்ச விகுதி

அ) விகாரம் ஆ) இறந்த கால இடை நிலை இ) சாரியை ஈ) எழுத்துப்பேறு